## செயற்பொறியாளர் அலுவலகம், பொபது., தென்மாநகரக் கோட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: பொறி. இரா.பாண்டி, M.Tech., M.B.A.,
செயற்பொறியாளர்(கூ.பொ), பொ.ப.து.,

**செயல்முறை ஆணை எண். இ1/408 /2019-3, நாள்:23. 09.2019**

**பொருள்:** நியமனம் (நேரடி) – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டி தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்குதல்.

**பார்வை:**
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.1150/PSD-H2/2019, நாள்:18.02.2019.
2. முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது). பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)/25366/2019, நாள்:25.02.2019.

------------

பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்ட செல்வி.S.பிரியதர்ஷினி அவர்கள் 13.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

| தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய வரிசை எண். | பெயர் மற்றும் பிறந்த தேதி | பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 41 | செல்வி.S.பிரியதர்ஷினி (பி.தே 10.04.1997) | இளநிலை உதவியாளர் | 13.03.2019 முற்பகல் | 13.03.2019 முற்பகல் |

இவரது பணியினை வரன்முறை செய்யும்பொருட்டு இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் இதுநாள் வரை இவர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் குற்றக்குறிப்புரை ஏதும் நிலுவையில் இல்லை.

எனவே, தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016 (தமிழ் நாடு சட்டம்-14/2016) பொது விதி 28(1) து.பி(1) (4) பிரிவு 17-ன்படி இவர் பணியேற்ற 13.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும், மேலும் பணிவரன்முறைபடுத்தப்படும் நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது

2....

மேற்படி நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் எனவும் மேலும் இவர் தகுதிகாண் பருவம் முடிப்பதற்குள் பவானிசாகர் அரசு பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் அடிப்படை பயிற்சி தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொ.ப.து.,
தென்மாநகர கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.

23/9/19

**பெறுநர்**

செல்வி. S. பிரியதர்ஷினி,
இளநிலை உதவியாளர், பொபது.,
தென்மாநகரக் கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.

**நகல்:** முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது). பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

**நகல்:** முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் சென்னை மண்டலம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

**நகல்:** கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.